**யடியன்தொட்டை பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 27 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 17 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 19 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் யடியன்தொட்டை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டினுள் உற்பத்தி செய்யப்பட்ட கொம்போஸ்ட் பசளை இருப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களின் சரியான தன்மையை வெளிப்படுத்தும் வகையில் கணக்கீடு செய்தல் மேற்கொள்ள வேண்டும். | இதற்கு முன்னர் ஆரம்ப பசளை இருப்பினை கணக்கெடுக்கும் போது (மூலப் பொருள், முடிவுற்ற, முடிவுறாத பொருள்) இருப்பினுள் உற்பத்தி செய்யப்பட்ட பசளை தொகை இணக்கஞ் செய்யப்படவில்லை. |
| (ஆ) | 2016 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் மூலம் முன் கொண்டு வரப்படும் தொங்கல் கணக்கு மீதி ரூபா 65,621 இனை மீளாய்வாண்டிலும் தீர்க்க முடியாதிருந்ததுடன் அம் மீதி செலுத்த வேண்டிய மீதியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தொங்கல் கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவறுகளை இனங்கண்டு சரி செய்ய முயற்சி எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ஊழயர் கடன் மீதியில் நிதிக்கூற்றுக்கள் பிரகார மீதி மற்றும் ஊழிய கடன் பதிவேட்டு மீதிக்கிடையில் ரூபா 672,409 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் மற்றும் உபயோகப் பதிவேடுகள் இணக்கஞ் செய்யப்பட வேண்டும். | நிதிக்கூற்றுப் பெறுமதி மற்றும் உள்ளவாரான ஊழியர் கடன் மீதிகளை இணக்கஞ் செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன் |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) விரிவான அட்டவணைகள் சமர்பிக்கப்படாததால் கூட்டுத் தொகை ரூபா 17,134,210 ஆன இயந்திங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களும் மேலும் பெறுமதி ரூபா 4,199,437 ஆன தளபாட பொருத்துக்களையும் கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் பெறுமதிகளை உறுதி செய்வதற்கான சான்றுகளை முன்வைக்க வேண்டும். | நிலையான சொத்து பதிவேடு நாளாதுவரையாக்கப்படாததால் இப் பிரச்சினை ஏற்பட்டுள்ளதா இனங்காணப்பட்டுள்ளது. 2020 ஆண்டினுள் இப் பெறுமதிகளிற்கான சரியான அட்டவணைகளை தயாரித்து சமர்பிக்கிறேன். |

**1.4 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 571 (2) | 2006 ஆண்டு முதல் 2017 வரையான கால எல்லைக்குரிய கூட்டுத் தொகை ரூபா 104,435 ஆன காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் முடியுமான அனைத்து தீர்ப்பனவுகனையும் மேற்கொள்ள குறித்துக் கொண்டேன். |
| (ஆ) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 10 வாகனங்களின் எரி பொருள் பாவனை பரிசீலனை செய்யப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உச்ச இயலுமையுடன் சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,175,128 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 11,301,488 ஆனது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் வரி | 4,614,228 | 5,010,974 | 4,993,213 | 808,734 | 4,959,036 | 4,959,036 | 4,257,,495 | 790,972 |
| (ii) | வாடகை | 8,134,800 | 6,607,001 | 6,424,937 | 385,736 | 5,759,118 | 5,759,118 | 5,648,196 | 203,671 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,243,050 | 1,125,719 | 1,178,903 | - | 828,335 | 828,335 | 775,151 | 53,184 |
| (iv) | ஏனைய வருமானம் | 56,052,346 | 48,688,222 | 52,363,244 | 22,616,250 | 7,698,878 | 47,698,878 | 33,330,546 | 26,291,271 |

**2.2.2 காணி குத்தகைக்கு வழங்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 171,670 ஆன காணி குத்தகைக்கு வழங்கியதிலிருந்து அறவிட வேண்டிய வருமானத்தை மீளாய்வாண்டினுள் அறவிட இயலாமலிருந்ததுடன், அவற்றில் ரூபா 21,000 தொகை 2017 ஆண்டிற்கு முன்னரிலிருந்து அறவிட வேண்டிய பணமாகும். ஆண்டிற்குரிய பில்லிடல் ரூபா 95,565 இலிருந்து ரூபா 8,750 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறவிட வேண்டும். | இவ்வாண்டினுள் சரி செய்து கொள்ள நடவடிக்கை எடுக்க முடியுமென அறிவிக்கிறேன். |

**2.2.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| யடியன்தொட்ட வாராந்த சந்தை 2 ஆம் இலக்க சிற்றுண்டிச்சாலையை டென்டர் செய்ய முடியாததில் அதிலிருந்து பெற்றுக் கொள்ள இயலுமாக இருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | குறைபாடுகளை நிவர்த்தி செய்து குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கிறேன். |

2.2.4 விளம்பரப் பலகைக் கட்டண வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விளம்பரப் பலகை காட்சிப்படுத்தலிற்காக அறவிட வேண்டிய ரூபா 182,750 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை தாமதமின்றி அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டினுள் வருடாந்த விளம்பரப் பலகை கணிப்பீடொன்றை உரிய முறையில் செய்துள்ளதால் எதிர்காலத்தில் இப் பிரச்சினையை தீர்த்துக் கொள்ள முடியுமாகும். |

2.2.5 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளிரமிடந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டபணம் ரூபா 5,018,625 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 14,191,037 ஆனதுடன், ஓராண்டை விஞ்சிய காலமாக அறிவிடப்படாது காணப்படும் மீதிகள் ரூபா 8,534,602 ஆனது. | சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை இனங்கண்டு அறிவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிடைக்க வேண்டிய அனைத்து முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணத்திற்காக கோரிக்கை விடுக்கப்பட்டு மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**செயல் நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின் பிரகாரம் முன்னேற்றத்தை காட்டும் செலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு இருக்காததன் காரணமாக எதிர்பார்த்த இலக்குளை அடைந்து கொள்வது தொடர்பாக பரீட்சிக்க முடியாதிருந்தது. | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதின் பிரகாரம் முன்னேற்றத்தை காட்டும் வகையில் செலாற்றுகை அறிக்கையை தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் சரிசெய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது நூலகத்திற்காக நிறந்தர கட்டிடமொன்றை நிர்மாணப்பதற்காக மற்றும் யடியன்தொட்ட பொது சந்தையிற்கு அருகில் வாகன தரிப்பிடமொன்றை தயாரிக்கவும், எஞ்சுகின்ற பணத்தை சபையின் அபிவிருத்தி உத்தேசங்களில் ஈடுபடுத்தும் எதிர்பார்ப்பில் ரூபா 5,000,000 ஆன நிலையான வைப்பை 2019 பெப்ரவரி 28 திகதி விடுவித்திருந்த போதும், நூலக கட்டிட ஆரம்ப பணிகள் தாமதித்ததனால் 2019 ஆகஸ்ட் 15 திகதி அப்பணம் மீண்டும் நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. 2019 பெப்ரவரி 28 முதல் 2019 ஆகஸ்ட் 15 வரை ரூபா 208,250 ஆன வட்டி சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | பணிகளை திட்டமிடுவதனை முறையாக மேற்கொண்டு, உரிய நேரத்தில் நிதியத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க உள்ளகத்தினரை அறிவூட்டல் நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. |
| (ஆ) | உளளூராட்சி சுற்றறிக்கை 07/2010 இன் 04 பந்தி பிரகாரம் அதிகார எல்லையினுள் காணப்படும் பெலிலென போன்ற வரலாற்று ரீதியான இடங்கள் மற்றும் கட்டிடங்களை தொடர்பான பதிவேடொன்றை பேணுச் செல்லல் மற்றும் அவ் இஸ்தானங்கள் உள்ளிட்ட பெறுமதியான சூழலை பாதுகாப்பதன் முக்கியத்துவம் பற்றி பொது மக்களை அறிவூட்டும் நிகழிச்சித் திட்டங்களை நடாத்த வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டினுள் வருடாந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது இது தொடர்பாக விஷேட கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | பிரதேசத்தில் அமைந்துள்ள ரம்மியமான இடங்களை சுற்றுலா நிலையங்களாக அபிவிருத்தி செய்து, பொது வசதிகளை மேம்படுத்தி வருமானம் உழைக்கும் வழிகளாக மாற்றிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது வசதிகளை மேம்படுத்தி வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபையின் வலுவிற்கு ஏற்ப மேற்கொள்ள முடியுமான கருத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்த அல்லது ஏனைய நிறுவனங்களிற்கு சமர்பித்து மேற்கொள்ள இயலுமான விடயங்களிற்காக அவ்வாறு ஈடுபடவும் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் 5 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்குகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 5,371,007 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டினுள் விடுவிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 15 பதவி வகைகளில் 26 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் 26 வெற்றிடங்களில் 11 இற்காக அமைய மற்றும் பதில் கடமை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | உரிய முறையில் ஆளணியை நிரப்ப நடவடிககை எடுக்க வேண்டியமை. | கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் பதவி மற்றும் பருந்து கலவையாளர் பதவியொன்றும் அங்கீகார ஆளணியினுள் காணப்பட்ட போதும் ஆயுள்வேத மத்திய நிலையமொன்றை நடாத்திச் செல்ல தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | பொது சுகாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆயுள்வேத சேவையை விரிவுபடுத்தவுள்ள வாய்புகள் தொடர்பாக கண்டறிந்து எதர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 1985 ஜனவரி முதல் 2015 ஆகஸ்ட் வரையான காலத்திற்குரிய ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் இடமாறிச் சென்ற அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் 39 பேர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 184,856 ஆன கடன் தொகையை அறவிட்டிருக்கவில்லை. | நிலுவை ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஊழியர் கடன் விடய பராமரிப்பு மற்றும் கட்டுப்பாட்டின் குறைபாடுகள் காரணமாக ஏற்பட்டுள்ள இப் பிரச்சினைக்காக தீர்வை தேடிக் கொள்ள உட்சாகத்துடன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மலசல கழிவுகளை வெளியிடுவதற்கு முறைமையொன்று இல்லாததனால் மீளாய்வாண்டின் போது நகர்புர மக்களுக்கு மலசல கலி சேவையை பெற்றுக் கொடுக்க முடியாமலிருந்தது. | நகர்புர மக்களுக்கான முக்கிய சேவைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்த வேண்டும். | இச் சேவையை நாளாதுவரையாக்கிக் கொள்ள எதிரக்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபை அதிகார எல்லையில் காணப்படும் 51 சுடலைகளை இனங்கண்டுள்ள போதும், சுடலைகள் மற்றும் கலலறைகள் அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சுடலையொன்றென வெளியிட, சுடலைகளாக பயன்படுத்தப்படும் காணிகளை சுவீகரிக்க மற்றும் சுடலைகளின் நிர்வாகத்தை ஒழுங்கமைக்க உப விதிகளை விதிக்க மற்றும் சகல தகவல்களும் உள்ளடங்கிய பதிவேடொன்றை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுடலைகள் மற்றும் கலலறைகள் அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப இனங்காணல் செயற்பாட்டை மேற்கொண்ட பின்னர் எஞ்சிய செயற்பாடுகளிற்கு போதிய காலமொன்று இல்லாதிருந்ததால் சுட்டிக் காட்டப்பட்ட நிலைமை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் முறையாக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) சொத்துக்கள் பதிவேடு நாளாதுவரையாக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு நிலையான சொத்துப் பதிவேட்டை நாளாதுவரையாக்கவும், சபைக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்களை இனங்கண்டு நிலையான சொத்துப் பதிவேட்டை நாளாதுவரையாக்கி கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலையான சொத்துப் பதிவேட்டை நாளாதுவரையாக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

### (ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு மற்றும் சபரகமுவ மாகாண சபையினால் வழங்கப்பட்ட ரூபா 39,547,420 பெறுமதியான 13 வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த வாகனங்களின் உரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் நடவக்கை எடுக்கிறேன். |

**(இ) விளைவற்ற சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 4,124,600 பெறுமதியான 06 வாகனங்கள் 04 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலமொன்றாக விளைவற்றதாக நிலவுகின்றன. | 2018 மார்ச் 19 திகதிய 01/2018 கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 (ஆ) பந்தி பிரகாரம் செலுத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்களை பராதீனம் செய்ய வேண்டும். | பயன்படுத்த முடியாத மற்றும் பாவனையிலிருந்த அகற்றிய இவ்வாகனங்களை முறையாக பராதீனம் செய்ய எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பாதீட்டினால் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த 22 செலவின விடயங்களில் ரூபா 3,178,312 ஆன மொத்த ஒதுக்கீடும், 24 செலவின விடயங்களில் 50 சதவீதத்திற்கு மேற்பட்ட ரூபா 1,843,402 ஆன ஒதுக்கீடும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்ட வகையில் ஒதுக்கீடு ஏற்பாடு செய்யவும், அவ் ஒதுக்கீட்டை வினைத்திறனாக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரவு செலவு மதிப்பீட்டின் போது மற்றும் செலவின முகாமைத்துவத்தின் போது ஏற்பட்டுள்ள இப்பிரச்சினையை எதிர்காலத்தில் தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |